# தூய அந்தோணியார் நவநாள்



தூய அந்தோணியார் திருத்தலம்
வெட்டுவெந்தி

வெட்டு வெந்தி

**கோடி அற்புதர்**

**தூய அந்தோணியார் திருத்தலம்**

மார்த்தாண்டம் - 629 165

குமரி மாவட்டம்

☎ : 04651 - 270636

*நவநாள் திருப்பலி :*

செவ்வாய் -காலை 11.00 மணி & மாலை 5.00 மணி

வெள்ளி -காலை 11.00 மணி

*ஞாயிறு திருப்பலி :*

காலை 8.00 மணி & மாலை 5.00 மணி

*அன்னதானம் :* செவ்வாய் & வெள்ளி (மதியம்)

*மது, மன நோயாளிகளுக்கு ஆற்றுப்படுத்துதல் :*

செவ்வாய், வெள்ளி & ஞாயிறு

# தூய அந்தோணியார் நவநாள்

## துவக்கப்பாடல்

(நிற்கவும்)

எங்கள் பாதுகாவலாகிய தூய அந்தோணியாரே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். (3)

புனிதருக்கு புகழுரை

பணி: அன்புச் சகோதர சகோதரிகளே

"புனிதர்களின் சமூக உறவையும் விசுவசிக்கிறேன்" என்று நாம் விசுவாசப் பிரமாணத்தில் அறிக்கையிடுகிறோம்.

புனிதர்கள் தங்கள் வாழ்க்கையை முழுமையாக மக்கள் நலனுக்காகவும் இறைவனின் மாட்சிக்காகவும் அர்ப் பணித்துக் கொண்டவர்கள். ஏழை எளியோரின் துயர் துடைத்து இறை சமூகத்தின் தொண்டர்களாக விளங்கியவர்கள். கிறிஸ்தவப் பார்வையும் செயல்பாடுகளும் நிறைந்த தங்கள் வாழ்க்கையால் இன்று நமக்கு முன் மாதிரியாக விளங்குகிறார்கள். நாம் இங்கு வணக்கம் செலுத்தும் தூய அந்தோணியாரும் இப்படிப்பட்டவர் தான். இவர் நமக்காகப் பரிந்து பேச ஆவலாயுள்ளார். இவர் வழியாக நாம் இறையாசீர் பெறுவதோடு அவர் அடிச்சுவடுகளை பின்பற்றி, இறைசமூகப் பணியில் நம்மையும் இணைத்துக் கொள்வோமாக.

பணி : இயேசுவின் உண்மைச் சீடரே
மக் : உமக்கு நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம்
பணி : இறையரசின் மதிப்பீடுகளைக் கடைபிடித்து வாழ்ந்தவரே
மக் : உமக்கு நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம்
பணி : இயேசுவின் பண்புகளை உமது வாழ்வில் வாழ்ந்து காட்டியவரே
மக் : உமக்கு நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம்
பணி : எளியோர்க்கு நற்செய்தி அறிவித்த போதகரே
மக் : உமக்கு நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம்
பணி : இறையரசின் பணிக்காக உம்மை அர்ப்பணித்தவரே
மக் : உமக்கு நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம்
பணி : திருச்சபையின் பணிக்காக உமது செல்வத்தையும் செல்வாக்கையும் துறந்தவரே
மக் : உமக்கு நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம்

## தூய அந்தோணியாரிடம் செபம்

பணி : தூய அந்தோணியாரே
மக் : சொல்லிலும் செயலிலும் வல்லவரே!
திருச்சபையின் அணிகலனே!
கிறிஸ்துவின் சாட்சியமே!
உம்மை நாங்கள் வாழ்த்துகிறோம்.

ஞானத்திலும், இறை அன்பிலும் சிறந்தவரே, உமக்கே நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம். உம் வழியாக கடவுள் எங்களுக்குச் செய்து வருகின்ற அருஞ்செயல்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து நீர் உதவி செய்யத் தூய உள்ளத்தோடும், நம்பிக்கையோடும் உம் வழியாக மன்றாடுகிறோம். ஏனெனில் அன்பும் இரக்கமும் வல்லமையும் இறைவன் உமக்கு தந்துள்ளார் என்று நாங்கள் அறிவோம். எங்கள் துன்பங்களையும் துயரங்களையும் போக்குவீராக.

(சிறிது நேரம் மௌனமாக செபித்தல்)

பணி : உம்மை அரவணைத்து

மக் : முத்தமிட்ட குழந்தை இயேசுவின்மீது நீர் மிகுந்த அன்பு கொண்டிருந்தீர். எங்கள் தேவைகளை அவரிடம் எடுத்துரைப்பீராக. குழந்தை இயேசுவோடு நீர் பெற்ற இறையனுபவம் மிகச்சக்திவாய்ந்தது. உமது பரிந்துரைகளால் எம் தேவைகளை அறிந்து உதவி செய்வீராக. அதனால் எங்கள் மகிழ்ச்சி முழுமை அடையும். உமது பெருமை எங்கும் பரவும். நாங்களும் இறைச்சாட்சிகளாக மாறி இறைசமூகத்தை எங்கும் உருவாக்குவோம். ஆமென்!

(நிற்கவும்)

# மக்கள் மன்றாட்டு

பணி : சகோதர, சகோதரிகளே, இறைவன் புனிதர்கள் வழியாக அருள் வரங்கள்ப் பொழிகிறார் "கோடி அற்புதர்" எனும் பெயர் பெற்ற தூய அந்தோணியார் வழியாக இறைவன் நம்மீது ஏராளமான நன்மைகளைப் பொழிய இறைஞ்சுவோமாக.

பணி : தூய அந்தோணியார் நற்செய்தி மதிப்பீடுகளைக் கடைபிடித்து இயேசுவின் உண்மைச் சீடராய் வாழ்ந்தது போல நாங்களும் வாழ வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி: இயேசு போதித்த இறையாட்சியை மலரச் செய்ய தூய அந்தோணியார் உழைத்தது போல நாங்களும் உழைக்க வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி: எங்கள் நாட்டில் நீதி, நேர்மை, பொதுநலம், தியாகம் போன்ற பண்புகள் வளர வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி: எங்கள் நாட்டு மக்கள் வறுமை, நோய், கடன் தொல்லை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற தீமைகளிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி: எங்கள் குடும்பங்களில் ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ளவும், நல்லுறவுகள் வளரவும், சமாதானமும் சந்தோஷமும் பெருகவும் வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி: எங்கள் மாணவர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள், சமூகத் தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகள் திரைப்படங்கள், தொலைக் காட்சிகள் ஆகியவற்றால் பாதிக்கப்படாமல், தங்களது முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்று..

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி: எங்கள் நாட்டில் மனித நேயம் வளரவும், மத நல்லிணக்கம் ஓங்கவும் வேண்டுமென்றும், அதற்காக நாங்கள் உழைக்க வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி: இயேசு போதித்த "எளியோர்க்கான நற் செய்தியை" இந்தக் காலத்துக்கும், நாட்டுக்கும் ஏற்ற விதத்தில் எங்கள் குருக்கள், ஆயர்கள், துறவியர்,பொது நிலையினர் போதிக்க வரம் தர வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி : உலகுக்கு உப்பாகவும் ஒளியாகவும், உலகை மாற்றும் புளிக்காரமாகவும் திருச்சபை விளங்க வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி : ஏழை எளியோருக்கும் சமுதாயத்தில் ஒடுக்கப் பட்டோருக்கும் சார்பாக நிற்கும் கிறிஸ்தவப் பண்பினைக்கடைபிடித்து வாழவேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

பணி : உடல், உள நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், விதவைகள், அனாதைகள் ஆகியோருக்கு நாங்கள் ஆதரவாகவும், ஆறுதலாகவும் வாழ வேண்டுமென்று...

மக் : தூய அந்தோணியார் வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

(நமது தேவைகளை இப்போது மௌனமாக எடுத்துரைப்போம்)

## நன்றியறிதல்

பணி : எங்களுக்காக இந்த அழகிய உலகைப் படைத்தமைக்காக...

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பணி : எங்களுக்காகப் பலவிதமான திறமைகளையும் கொடைகளையும் அருளையும் ஆசீரையும் தந்தமைக்காக...

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பணி : மனித குலத்தின் மேல் அன்பு கொண்டு உமதுஅன்புத் திருமகனைமானிடரில் ஒருவராகப் பிறக்கச் செய்தமைக்காக...

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பணி: மானிடராகப் பிறந்த உம் திருமகன் ஏழை எளியோருக்கு நற்செய்தி அறிவித்தமைக்காக...

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பணி: முழு மனித சமூக விடுதலைக்காக அவர் சிலுவையில்பாடுபட்டு,தன்னுயிரைத் தியாகம் செய்தமைக்காக...

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பணி: வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில் பெரியோர்களை இறைவாக்கினர்களாக அனுப்பி மானிடரை வழி நடத்தியமைக்காக...

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பணி: தூய அந்தோணியாரைத் திருச்சபைக்குத் தந்து அவர் வழியாக நற்செய்தியை அறிவித்தமைக்காக...

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பணி: தூய அந்தோணியாருடைய நல்ல பண்புகளையும் அர்ப்பண வாழ்வையும் எங்களுக்கு முன் மாதிரியாகத் தந்தமைக்காக ...

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

பணி: தூய அந்தோணியார் வழியாக நாங்கள் பெற்ற எல்லா நலன்களுக்காக..

மக் : தூய அந்தோணியார் வழியாக இறைவா உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.
(இறைவன் நமக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காக மவுனமாக நன்றி செலுத்துவோம்)

பணி: தூய அந்தோணியார்!

மக் : வாழ்வின் ஊற்றாக விளங்குகின்ற தாயும் தந்தையுமாகிய இறைவனுக்கு எங்கள் பெயரால் நன்றி நல்குவீராக. உம் வழியாக நாங்கள் ஏராளமான கொடைகளைப் பெற்றிருக்கிறோம். உமது முன் மாதிரியான வாழ்க்கைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களை உமது, இறையரசின்நீதி நேர்மையுள்ள ஊழியர்களாக மாற்றியருளும்.

பிறரன்புப் பணிகளில் நிலைத்திருந்து இறையன்பில் நாளும் நாங்கள் வளர்வோமாக! நன்மை நிறைந்த இறைவா, தூய அந்தோணியார் வழியாக உம்மை நாங்கள் மகிமைப்படுத்துகின்றோம். எங்கள் எடுத்துக் காட்டான வாழ்வால், "நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே, சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய். உன் தலைவனது மகிழ்ச்சியில் சேர்ந்து கொள்" என்னும் பாராட்டு வார்த்தைகளை உம்மிடமிருந்து கேட்கும் நிலையடைவோமாக.

ஆமென்

## வாசகம்

(அமரவும்)

..... மறையுரை.....

## நோயாளிகளை ஆசீர்வதித்தல்

பணி : மன்றாடுவோமாக

மக் : ஆண்டவரே, உடல், உள நோய்களால் வருந்தும் எம் சகோதர சகோதரிகளுக்காக உம்மை மன்றாடுகிறோம். உமது குழந்தைகளாகிய இவர்களுக்கு ஆறுதலும் அமைதியும் தாரும்.

இவர்கள் உமது ஆழமான அன்பை உணர்வதால் உமது குணமளிக்கும் வல்லமை இவர்களில் செயல் பட்டு முழுமையான குணம்பெறுவார்களாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் – ஆமென்.

பணி : (வலது கரத்தை நீட்டி) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பாதுகாக்க உங்கள் நடுவிலும், உங்களைக் காப்பாற்ற உங்களுக் குள்ளும், உங்களுக்கு வழிகாட்ட உங்களுக்கு முன்னும், உங்களுக்குக் காவலாயிருக்க உங்களுக்குப் பின்னும் உங்களை ஆசீர்வதிக்க உங்கள் மேலும் இருப்பாராக! தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே – ஆமென்.

## தூய அந்தோணியார் புகழ்மாலை

ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

*தாயும் தந்தையுமான இறைவா!*

– உமது இரக்கத்தால் எங்களை மீட்டருளும் ஆண்டவரே!

உமது அன்பை உணரச் செய்தருளும்
ஆண்டவரே
எங்களை இறைச் சமூகத்தின் பணியாளராக
மாற்றியருளும்
உயிருக்கெல்லாம் ஊற்றாகிய தந்தையே இறைவா
உமது இரக்கத்தால் எங்களை மீட்டருளும் ஆண்டவரே
விடுதலை வாழ்வளிக்கும் திருமகனே இறைவா...
எங்களை நல்வழி நடத்தும் தூய ஆவியாம் இறைவா...
மூவொரு கடவுளாம் இறைவா...
தூய அமலோர்ப்பவ கன்னிகையே...
மரியன்னையைப் போற்றி வாழ்ந்த தூய
அந்தோணியாரே
தூய பிரான்சிஸ்கு அசிசியாரைப் பின்பற்றிய தூய
அந்தோணியாரே...
இறைசமூகப் பணிக்காக தம்மையே அர்பணித்துக் கொண்ட தூய
அந்தோணியாரே...
நீதி நேர்மையில் சிறந்து விளங்கிய தூய
அந்தோணியாரே...
எளிமையின் சிகரமாகத் திகழ்ந்த தூய
அந்தோணியாரே...
சொல்லிலும் செயலிலும் தூயவராயிருந்த தூய
அந்தோணியாரே...
திருச்சிலுவையின் பொருளைப் புரிந்து கொண்ட தூய
அந்தோணியாரே...

குழந்தை இயேசுவின் நிறை ஆசீர் பெற்ற தூய

அந்தோணியாரே...

நற்செய்திப் பணியில் ஆர்வமாகச் செயல்பட்ட தூய

அந்தோணியாரே...

சமுதாயத்தில் தீய சக்திகளை எதிர்த்த தூய

அந்தோணியாரே...

ஏழை எளியோரின் நாவாக விளங்கிய தூய

அந்தோணியாரே...

துன்புறுவோரின் துணைவராம் தூய

அந்தோணியாரே...

நேர்மையானவர்களுக்கு முன்னோடியான தூய

அந்தோணியாரே...

நோயாளிகளுக்கு நம்பிக்கை நட்சத்திரமான தூய

அந்தோணியாரே...

காணாமல் போனவைகளைக் காட்டிக் கொடுக்கிற

அந்தோணியாரே...

உண்மை உரைப்போருக்கு உறுதுணையான தூய

அந்தோணியாரே...

மக்களுக்கு நிறைவாழ்வுப்பாதைகளைக் காட்டிச்சென்ற

தூய அந்தோணியாரே...

உம் நா அழியாதிருக்கும் வரம் பெற்ற தூய
அந்தோணியாரே...
கோடி அற்புதர் என்று பெயர் பெற்ற தூய
அந்தோணியாரே...
திருச்சபையின் தீபமான தூய அந்தோணியாரே...
உலகிற்கு முழு விடுதலையும் நிறைவாழ்வும் தருகின்ற
இறைவனின் திருமகனான இயேசுவே...

உமது அன்பை உணரச் செய்தருளும் ஆண்டவரே
உலகிற்கு விடுதலை தருகின்ற இறைவனின்
திருமகனான இயேசுவே

எங்கள் வேண்டுதல்களை ஏற்றருளும்

உலகிற்கு விடுதலை தருகின்ற இறைவனின்
திருமகனான இயேசுவே

எங்களை விடுதலைப் பாதையில் நடத்தியருளும்

## மன்றாடுவோமாக

*அன்பின் திருவுருவான இயேசுவே. தாம் வாழ்ந்த காலத்துச் சூழ்நிலைக்கேற்ப தம் சொல்லாலும் செயலாலும் இறை சமூகத்தை இம்மண்ணிலே உருவாக்கப் பாடுபட்ட தூய*

அந்தோணியாரை எங்களுக்குப் பாதுகாவலராகத் தந்தமைக்கு நன்றி கூறுகிறோம். நாங்கள் அவரைப் பின்பற்றி வாழ்ந்து, அவர் போற்றிய மதிப்பீடுகளை நாங்களும் கடைபிடிக்கச் சக்தி தந்தருளும். இந்த வாழ்க்கை மூலம் ஒரு புதிய உலகம் அமைப்போமாக, என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே.

– ஆமென்

